**தேதி - 07-12-2022 அசல் வழக்கு எண்.148/2010 பி.சா.3 (விஜயபாரதி)**

**7, 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

ஆறுமுகம்பிள்ளையின் தாயார் நல்லம்மாள் அவர்களுக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் சி, டி ஷெடியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் நல்லம்மாளுக்கு வாழ்நாள் அனுபவ பாத்தியம் மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும், அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய மக்களுக்கு செல்ல வேண்டுமென்று அதில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள சி, டி ஷெடியுல் சொத்துக்களை யார் விற்றார்கள், எப்போது விற்றார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. மேற்படி சி, டி ஷெடியூல் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். சி, டி ஷெடியூல் சொத்துக்களை பிராதில் சேர்க்கவில்லை. கொக்குளப்பிலுள்ள சொத்தின் சர்வே எண் தெரியாது. கொக்குளப்பியிலுள்ள சொத்து பூர்வீகச் சொத்தாகும். கொக்குளப்பி யிலுள்ள சொத்துக்களை ஆறுமுகம்பிள்ளையும், ராமலிங்கம்பிள்ளையும் விற்றார்கள். எப்போது விற்றார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அந்த பத்திரத்தையும் நான் பார்த்ததில்லை. கொக்குளப்பிலுள்ள சொத்தின் விபரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் அவர் இறக்கும் வரை பாகப்பிரிவினை கோரி எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை. 1, 2 வாதிகள் வழக்கு தாக்கல செய்வதற்கு முன்பே ஆறுமுகம்பிள்ளை மற்றும் அவருடைய வாரிசுகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு ஆறுமுகம்பிள்ளை என்ன பதில் அனுப்பினார் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் தாவாச் சொத்துக்களை கூட்டாக அனுபவிப்பதற்கு சொத்துவரிகளோ அல்லது பட்டாவோ எங்கள் பெயரில் மாற்றி தாக்கல் செய்துள்ளோமா என்றால் நாங்கள் பட்டா தாக்கல் செய்துள்ளோம். மேற்படி பட்டாவானது தாவா 2, 3, 8 சொத்திற்கான பட்டா ஆகும். மேற்படி பட்டாவானது இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது மாற்றப்பட்டது என்றால் தேதி தெரியாது. பட்டாமாறுதலுக்கு வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டாவின் அடிப்படையில் 7, 13 முதல் 15 பிரதிவாகதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. மேறபடி பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தை பொறுத்து எந்தவிதமான ஆவணங்களும் பதிவு செய்யக் கூடாது என்ற விபரம் எனக்குத் தெரியும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2014ம் வருடம் தாவா 3ம் லக்கச் சொத்தினை பொறுத்து 1 முதல் 5 வாதிகளும், நான் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் ஆகியோரும் சேர்ந்து முத்துராமலிங்கம் என்பவருக்கு ஒரு கிரையஆவணம்

எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் முத்துராமலிங்கம் தாவா 3ம் லக்கச் சொத்தை அனுபவம் செய்து வருகிறாரா என்றால் ஆமாம். தாவா 3ம் லக்கச் சொத்தில் நாஙகள் முத்துராமலிங்கத்திற்கு எழுதிக் கொடுத்தது பிரிவினையில்லாத 6ல்1 பாகம் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் முத்துராமலிங்கம் அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய முழுமையான விபரங்கள் தெரியாமல், நான் வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நாஙகள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.